பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 29 புதன்கிழமை 16.11.2022 கதிர் 263

## தேசிய கீதத்தை சத்தமாகப் பாடாத மாணவர் மீது ஆசிரியர் தாக்குதல்!

### பொலிஸார் விசாரணை

இலங்கையின் தேசிய கீதத்தை உரக்கப் பாடாமை காரணமாக ஆசிரியர் ஒருவர் மாணவர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

அவிசாவளை – ஹங்வெல்ல பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை 2

# வடக்கில் மக்களின் காணிகளைப் பிடித்து அவற்றை படையினருக்கு வழங்கும் பணி என்னுடையது அல்ல



### ஆளுநர் ஜீவன் தியாகராஜா விளக்கம்

வடக்கில் காணிகள் இல்லாத மக்களுக்கு அரச காணியைப் பெற்றுக் கொடுப்பதுதான் எனது நோக்கமே தவிர, மக்களின் காணிகளைப் பிடித்து அவற்றைமுப்படையினருக்குவழங்கும் பணி என்னுடையது அல்ல.

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்ற காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் நிறைவடைந்த பின்னரும்கூட, வடக்கு மாகாணத்தில் காணிகள் இல்லாத மக்களுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுப்பதென்பது மந்த கதியிலேயே காணப்படுகின்றது. வடக்கின் ஆளுநர் என்றவகையில்மக்களின்தேவைகளை இனங்கண்டு அதை நிறைவேற்றுவது எனது பணியாகும்.

வடக்கு மாகாணத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அரச காணிகளின் தேவைப்பாடுடையவர்களாக இருக்கின்றார்கள். வடக்கு மாகாணத்தில் உள்ள அரச மற்றும் தனியார் காணிகள் தொடர்பான விவரங்களை பிரதேச செயலாளர்கள் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி அது தொடர்பான முடிவுகளை எடுக்கவே அவர்களை அழைத்திருந்தோம். 2

# இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சியே தீர்வு

### ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்தால் பேச்சுக்குத் தயார் என்கிறது முன்னணி

ஒற்றையாட்சி முறையை இல்லாதொழித்து சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்தத் தயார் என்பதை தமிழ், சிங்கள மக்கள் அனைவரிடமும் பகிரங்கமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூற வேண்டும். 8



## வவுனியாவில் துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம்

### பொலிஸ் தீவிர விசாரணை



(வவுனியா நிருபர்)

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தன்குளம் காட்டுப்பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், மல்லாகத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டமூன்றுபிள்ளைகளின் தந்தையான அச்சுதநாயகர் ஜெயந்தகுமார் (வயது 48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் வவுனியா கந்தன்குளத்திலுள்ள உறவினர் வீட்டுக்குகடந்தஒருவருடத்துக்கு முன்னரே வந்து தங்கியிருந்து அங்குள்ள காணியைத் தனிமையில் இருந்து பராமரித்து வந்துள்ளார்.

குடும்பத்தினர் குறித்த 2

## தமிழக முதல்வருடன் செந்தில் நேரில் பேச்சு



தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை மக்களுக்கு கடந்த காலங்களில் தமிழக அரசால் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவித் திட்டங்களுக்கு செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்ததுடன், ஜனாதிபதி 2

## கோர விபத்தில் பெண் மரணம்

### 10 பேர் காயம்

மத்துகமவில் இருந்து ஹினிதும நோக்கிப் பயணித்த மினி பஸ் ஒன்று மீகஹதென்ன சந்தியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் களுத்துறை – நாகொட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மீகஹதென்ன பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடு செல்லும் 2

## இனிமேல் 'மொட்டு' மீண்டெழ முடியாது

### அடித்துக் கூறுகின்றார் விமல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியால் இனி மீண்டெழ முடியாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இலங்கையில் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் போது எந்தவொரு 2

## ரணிலின் ஆலோசகராக சரத் வீரசேகர நியமனம்



உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள் ளார்.

முன்னாள் அமைச்சரவை அமைச்சரான சரத் வீரசேகர எம்.பி., ஜனாதிபதி செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 2

## வைரஸ் காய்ச்சலால் மாணவி ஒருவர் சாவு

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறைப் பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தரம் 7இல் கல்வி பயிலும் மாணவி ஒருவர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், 2

## ஐ.நா. அரசியல் துறைப் பணிப்பாளர் முற்போக்குக் கூட்டணியுடன் சந்திப்பு





நியூயோர்க்கிலிருந்து செயற்படும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய – பசிபிக் திணைக்கள அரசியல் மற்றும் சமாதான முன்னெடுப்புப் பணிப்பாளர் பீட்டர் டியூவை தமிழ் முற்போக்குக் கூட்டணி சந்திக்கவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தென்னிலங்கையில், வாழும் சிறுபான்மை 2

## ஐ.நா. ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய மான சவால்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராய விரும்புகின்றோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு விடுத்துள்ள அழைப்பில் கொழும்பில் உள்ள ஐ.நா. காரியாலயம் தெரிவித் துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, தமிழ் முற்போக்குக் கூட்டணி தொகுத்துள்ள, இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் தேசிய அரசியல் அபிலாஷ ஆவணம், பணிப்பாளர் பீட்டர் டியூவுக்கு வழங்கி வைக்கப்படும் என்று தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்துடன் ஐ.நா. உலக உணவுத் திட்டம் மற்றும் உலக வங்கி ஆகிய சர்வதேச அமைப்புகள், உணவின்மை மற்றும் வறுமை ஆகியவற்றால் பின்தங்கிய நலிவுற்ற மக்களாக கணக் கெடுத்து அடையாளப்படுத்தியுள்ள பெருந்தோட்ட மக்கள் மற்றும் நகர பாமர மக்கள் தொடர்புகளிலும் ஐ.நா. அதி காரிகளுக்கு மேலதிக விளக்கங்கள் காத்திரமாக வழங்கப்படும் என்றும் மனோகணேசன் எம்.பி. கூறினார்.

## இனிமேல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியாலும், ஆட்சி அமைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மையைப் (113) பெற முடியாமல் போகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, கூட்டணி ஆட்சி அமைப்பதற் கான சாத்தியமே உருவாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## தமிழக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க, இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தவிசாளர் ராமேஸ்வரன் ஆகியோர் நன்றி தெரிவித்ததாகவும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் உள்ள ம லையக மக்களுடைய பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பாரதியார் கவி தைகள் புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## ரணிலின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவுப் பாதுகாப்பு அலுவலகத்தில் இருந்து பணியாற்றவுள்ளார்.

ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்பு வேலைத்தி ட்டத்தை வழிநடத்தும் பொறுப்பு கலாநிதி சரத் வீரசேகரவிடம் ஒப்படைக்கப்பட்டவுள் ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பாடசாலை ஆரம்பிக்கப் படும் போது தேசிய கீதத்தை மாணவர் கள் பாடிக்கொண்டிருந்தனர்.

இதன்போது உரக்கப் பாடுமாறு தெரி வித்து குறித்த ஆசிரியர் மாணவர் ஒரு வரின் தலையில் தாக்கினார் என்று பொலிஸாரிடம் பெற்றோர் முறையிட் டுள்ளனர். இந்தத் தாக்குதல் காரணமா கப் பாதிக்கப்பட்ட மாணவர் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரி யர், பொலிஸாரால் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

## வைரஸ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரி ழந்தார். அவரது ஜனாசா இன்று காலை சம்மாந்துறையில் நல்லடக்கம் செய் யப்பட்டது. வைரஸ் காய்ச்சலின் காரணமா க இந்த மரணம் ஏற்பட்டது என்று வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன

## கோர விபத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணொருவரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறக்கிவிட்டு இன்று (16) அதிகாலை வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

பயணத்தின்போது சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை, இந்த விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## வடக்கில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணத்தில் உள்ள தனியார் காணிகளை உரிய முறையில் அடை யாளப்படுத்தாத பலர் இருக்கின்ற நிலை யில் அவர்களின் காணிகளை உறுதிப் படுத்துவதற்குரிய ஆலோசனைகளை ஆளுநர் செயலகம் மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றது.

வடக்கில் பாதுகாப்பு காரணங்க ளுக்காக அரசு கையகப்படுத்தும் காணி தொடர்பில் ஆளுநர் இறுதி முடிவெடுப் பதில்லை. அது தெரிந்திருந்தும் ஆளுநர் மக்களின் தனியார் காணிகளைப் பிடித்துக் கொடுக்கின்றார் என தமது அரசியல் தேவைகளுக்காகச் சிலர் மக் களுக்கு தவறான புரிதல்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் – என்றார்.

## வவுனியாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபரை கடந்த 14 ஆம் திகதியிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியாததால் அவரது மனைவி நேரில் வந்து எங்கு தேடியும் கணவன் இல் லாமையால் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் நேற்று கணவனைக் காணவில்லை என முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார்.

முறைப்பாட்டுக்கமைய கந்தன்குளம் பகுதியில் பொலிஸார் இன்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது குறித்த நபர் காட்டுப் பகுதியில் நாட்டுத் துப்பாக் கியுடன் சடலமாகக் காணப்பட்டார்.

இது கொலையா அல்லது வேட் டைக்குச் சென்ற போது ஏதாவது நடந்தி ருக்குமா போன்ற கோணங்களில் பூர்வாங்க விசாரணைகளை பூவரசங் குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முன்நிபந்தனை அரசியல்

ஈழத் தமிழர்களின் அரசியல் என்பது கடந்த ஏழரை தசாப்தங்களாக போராட்டமாகவே இருந்து வருகின்றது. போராட்ட வடிவங்கள் அவ்வப்போது மாறியிருக்கின்றன. அவ்வளவுதான். மற்றும்படி தமிழர்களைப் பொறுத்தவரை அரசியல் தளம் என்பது ஒரு போராட்டக் களம்தான்.

சாதாரண போராட்டக் களத்திலும் சரி, அரசியல் போராட்டக் களத்திலும் சரி, முக்கியமான ஒன்று 'வலி அறிதல்' அல்லது 'வலிமை அறிதல்.'

'வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும்
துணை வலியும் தூக்கிச் செயல்'

– என்றான் தமிழ் மறை தந்த திருநாப் போதகன் வள்ளுவப் பெருந்தகை.

தான் ஆக்கப் போகும் செயலின் வலிமை, பகைவனின் வலிமை, இரு சாராருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமை ஆகியவற்றை அறிந்தே அந்தச் செயலில் ஈடுபட வேண்டும் என்று வள்ளுவன் இக்குறள் ஊடாகப் போதிக்கின்றான் என்கிறார் கலைஞர் மு கருணாநிதி.

அந்த வலி அறிதலில் தவறிழைத்தமையால் தான் தமிழர்களின் அரசியல் போராட்டம் போக்கிடமின்றி, பேரிடரில் இன்று இப்படி நட்டாற்றில் இனத்தைக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கின்றது என்பது திண்ணம்.

ஆனாலும் இந்த இழிநிலைக்கு வந்து அல்லலுற்று நிற்கும் சமயத்தில் கூட, தமிழினம் திருந்தப் போவதில்லை என்றே தோன்றுகின்றது.

எல்லோராலும் தலைவர் பிரபாகரனாகி விட முடியாது. அவர் நிலையில் இருந்து பேச முடியாது. அவர் கொண்டிருந்த வலிமையை – பேரம் பேசும் தகுதியை – எட்டி விட முடியாது.

பேரம் பேசும் வலிமையை – போராட்ட திறனை – இழந்து தமிழினம் இன்று நிர்கதி நிலையில் இருந்தாலும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுப் பலம் என்ற துணை வலிமை நமக்கு ஓரளவு உள்ளது. அதனை சமயோசிதமாகப் பயன்படுத்துவதில்தான் எமது வெற்றி வாய்ப்பு தங்கி உள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிட்ட வேண்டும் என்ற போராட்டத்தில், தமிழர்கள் நீதி, நியாயமாக, ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மாண்புகளுக்கு உட்பட்டு, காரியமாற்றுகின்றார்கள் என்ற நம்பிக்கையை சர்வதேச பார்வையில் நாம் தக்க வைத்திருந்தால் மட்டுமே சர்வதேச என்ற துணை வலிமை நமக்கு ஆதரவாக நிற்கும்.

இன்றைய கட்டத்தில் தமிழர்கள் மத்தியில் அரசியல் செய்யும் தமிழ் தலைமைகளுக்கு இந்த யதார்த்த நிலைப்பாடு புரிய வேண்டும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்த யதார்த்தத்தைப் புரிந்து, அதன்படி செயல்படுவதை விடுத்து, கற்பனையில் சிறகடிக்கும் இக்கட்டான முன் நிபந்தனைகளை விதித்து, அரசியல் போராட்ட முஸ்தீபுகளைச் செய்து வருகின்றார்களோ என்று தோன்றுகின்றது.

சமஷ்டி தரத் தயார் என்று திட்டவட்டமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தால் மட்டுமே அவருடன் பேசப் போகலாம் என்று முன் நிபந்தனை விதிப்பது தாங்கள் இன்னும் பிரபாகரன் வலிமை நிலையில் இருக்கின்றார்கள் என கருதிக் கொண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அபத்த அரசியல் நடத்துவதாகவே படுகின்றது.

யதார்த்தத்தில் சாத்தியமான நிலையில் நின்று பேசுவது அரசியல் வெற்றிகளுக்கு மிக மிக முக்கியமாகும்.

# சஜித் கூட்டணியில் இணையவில்லையாம்!

## ஜோன் செனவிரத்ன கூறுகிறார்



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இணைந்ததாக வெளியான செய்திகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (புதன்கிழமை) இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் எந்தவொரு கட்சியுடனும் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் தாம் இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மலேரியா விழிப்புணர்வுப் போட்டியில் மட்டு. நோய் தடுப்பு இயக்கம் சாதனை!



2022 ஆம் ஆண்டு தேசிய ரீதியாக சுகாதார அமைச்சுடன் மலேரியா நோய் தடுப்பு இயக்கம் இணைந்து நடத்திய மலேரியா நோய் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான போட்டியில் மட்டக்களப்பு மலேரியா நோய் தடுப்பு இயக்கம் சாதனை படைத்துள்ளது.

மலேரியா தொடர்பான விழிப்புணர்வு போட்டியில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட மட்டக்களப்பு மலேரியா தடை இயக்கம் சார்பாக போட்டியிட்ட பட்டிப்பளை சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவு ஜ் ரூப் வீடியோ பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் பேஸ் புக் பிரிவில் கிரான் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவு முதலாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

நாரஹேன்பிட்டி தேசிய இரத்த மாற்று சேவைகள் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது இவர்களுக்கான நினைவுச் சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் பெற்றுத் தருவதாக மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் கைது!

எரிபொருள் பெற்று தருவதாக ஊரவர்களிடம் பணத்தைப் பெற்று மோசடிசெய்த குற்றச் சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவிய காலப் பகுதியில் , பெற்றோல், மண்ணெண்ணெய் , டீசல் என்பவற்றை பெற்றுத்தருவதாக பலரிடம் பெரும் தொகையான பணம் வாங்கியதாக பணம் கொடுத்தவர்கள் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து , குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தரை மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நூற்றாண்டு பழமையான மரம் சாிந்து விழுந்ததில் யாழ். கச்சேரி வீதியில் போக்குவரத்துக்குத் தடை!




யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற கால நிலைமை காரணமாக நூற்றாண்டு பழைமையான மலை வேம்பு மரம் சரிந்து விழுந்துள்ளதால் வீதியின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

கச்சேரி – நல்லூர் வீதிக்கு அருகில் காணப்பட்ட குறித்த மரம் கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் சரிந்து விழுந்தது, அதனால் அருகில் இருந்த வீட்டின் மதில் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

வீதியின் குறுக்கே காணப்படும் மரத்தினை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# அமெரிக்காவில் அதிகரிக்கும் துப்பாக்கிச் சூடுகள் நடப்பாண்டில் மட்டும் அறுநூறு சம்பவங்கள் பதிவு



அமெரிக்கா, நவ.16

அமெரிக்காவில் நடப்பு ஆண்டில் மட்டும் பெரிய அளவில் 600 துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் வரை நடந்துள்ளன என்று துப்பாக்கி வன்முறை சம்பவங்களின் தொகுப்பு அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினம் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்தே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக அமெரிக்காவில் பள்ளி விளையாட்டு மைதானங்களில் நடப்பு ஆண்டில் இதுவரை 68 துப்பாக்கி சூடுகள் நடந்து உள்ளன எனவும், இவற்றில் கல்லூரி வளாகங்களில் நடந்த 15 சம்பவங்களும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நடைபெற்ற ஒவ்வொரு சம்பவத்திலும் குற்றவாளியால் குறைந்தது ஒருவர் சுடப்பட்டு உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க வரலாற்றிலேயே கொடூர துப்பாக்கி சூடு கடந்த 2007 ஆம் ஆண்டு நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. அந்தச் சம்பவத்தில் பிளாக்ஸ்பர்க் நகரில் உள்ள வேர்ஜீனியா டெக்கில் 32 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட 23 வயது மாணவர் பின்னர் தற்கொலை செய்து கொண்டார். இந்நிலையில், அமெரிக்காவில் துப்பாக்கி சூட்டு வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து உள்ளமை வேதனை ஏற்படுத்துகிறது என்றும் அதனை கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.

எனினும், அதற்கான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் பெரிய அளவில் அதனால் பலன் ஏற்படாத சூழல் உள்ளதாகவும், தொடர்ந்து, நடப்பு ஆண்டில் துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.



# பாலஸ்தீனரின் கத்திக் குத்தில் இஸ்ரேலியர்கள் இருவர் சாவு!

## கொலையாளி சுட்டுக் கொலை

ஜெருசலேம்,நவ.16

இஸ்ரேலின் மேற்குகரை பகுதியில் உள்ள ஏரியல் நகரில் வாகனங்களுக்கு எரிவாயு நிரப்பும் காஸ் நிலையத்துக்கு அருகில் நின்றுகொண்டிருந்த இஸ்ரேலியர்களை பாலஸ்தீன வாலிபர் ஒருவர் கத்தியால் சரமாரியாக குத்தியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் சம்பவத்தினால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தக் கத்திக்குத்துத் தாக்குதலில் இஸ்ரேலியர்கள் 3 பேர் படுகாயம் அடைந்த நிலையில், தாக்குதலில் ஈடுபட்ட பாலஸ்தீன வாலிபர் அங்கிருந்து தப்பி ஓட முயன்றபோது, இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்கள் அவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

பின்னர், கத்திக்குத்துத் தாக்குதலில் படுகாயம் அடைந்த 3 பேரையும் மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மற்றொரு நபருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் மேற்குகரை மற்றும் ஜெருசலேம் நகரில் நடந்த வன்முறை சம்பவங்களில் இந்த ஆண்டில் மட்டும் 23 இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனர்கள் சுமார் 130 பேரும் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜி20 மாநாட்டில் சரளமாக உலா வந்த கம்போடியப் பிரதமருக்கு கொரோனா!




நாம்பென்,நவ.16

இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறும் ஜி20 மாநாட்டில் பங்கேற்கச் சென்ற கம்போடிய பிரதமர் ஹுன் சென்க்கு நேற்று முன்தினம் மாலை கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் வெளிவந்த நிலையில், அவருக்குக் கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சமீபத்தில் கம்போடியாவின் நாம்பென் நகரில் நடந்த ஆசியன் மாநாட்டில், அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளுடன் 8 தெற்காசிய நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர். அவர்கள், கம்போடிய பிரதமர் ஹுன் சென்னுடன் முக கவசம் இன்றி ஒன்றாகச் சந்தித்துக் கொண்ட சம்பவங்கள் நடந்து உள்ளன.

இந்த நிலையில், சென்னுக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்ட தகவல் வெளிவந்துள்ளது. இதனை தனது பேஸ்புக் பதிவில் வெளியிட்ட சென், அன்பிற்குரிய சக நாட்டு தலைவர்களே! இந்தோனேசியாவில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்க வந்தபோது, கொரோனா தொற்று உறுதியாகி உள்ளது. ஆனால், எந்த அறிகுறிகளும் எனக்கு இல்லை. ஒவ்வொரு நாளும் பாலிக்கு வருவதற்கு முன் பரிசோதனை செய்து, அதில் கொரோனா தொற்றில்லை என முடிவுகள் வந்து கொண்டிருந்தன. ஆனால், இந்த தொற்று தற்போது எப்படி ஏற்பட்டது என உறுதியாக எனக்குத் தெரியவில்லை. நேற்று மாலை பரிசோதனை செய்து, அதன் முடிவில் இன்று(நேற்று) காலை இந்தோனேசிய அதிகாரிகள் தொற்றை உறுதி செய்துள்ளனர்.

நான் பாலிக்கு காலதாமதமுடன் வந்தது ஒரு வகையில் அதிர்ஷ்டம். அதனால், பிற தலைவர்களுடன் இரவு உணவு சாப்பிட முடியாமல் போய் விட்டது. என தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து கம்போடிய அரசு குழு சொந்த நாட்டுக்கு திரும்பியுள்ளனர். இதனால், சீன அதிபர் ஜின்பிங், பிரான்ஸ் அதிபர் மேக்ரானுடனான இந்த வார இறுதியில் நடைபெற உள்ள சந்திப்பை சென் தவிர்க்க வாய்ப்புகள் உள்ளன எனக் கூறப்படுகின்றது.

# 'அதிக ஆபத்தான மூன்றாம் நாடுகள்' பட்டியலிலிருந்து பாகிஸ்தான் நீக்கம்



லண்டன், நவ.16

நிதி நடவடிக்கைச் செயற்க்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அதிக ஆபத்தான மூன்றாம் நாடுகள் பட்டியலில் இருந்து இங்கிலாந்து அரசு பாகிஸ்தானை விடுவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜி7 நாடுகள் அமைப்பு எடுத்த முயற்சியால், 'நிதி நடவடிக்கை செயற்குழு' 1989இல் நிறுவப்பட்டது. இது சர்வதேச அரசாங்கங்களுக்கு இடையேயான அமைப்பாகும். நிதி நடவடிக்கை செயற்குழு பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்யப்படுவதைக் கண்காணிக்கிறது.

இந்நிலையில், நிதி நடவடிக்கை செயற்குழு பரிந்துரையின்கீழ், இங்கிலாந்து அரசாங்கம் 2021ஆம் ஆண்டு ஏப்ரலில் அதிக ஆபத்துள்ள நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானை சேர்த்தது. ஈரான், மியான்மர், சிரியா உள்ளிட்ட 26 நாடுகள் அதிக ஆபத்துள்ள நாடுகளின் பட்டியலில் உள்ளன. தற்போது இந்த, 'அதிக ஆபத்துள்ள மூன்றாம் நாடுகள்' பட்டியலில் இருந்து பாகிஸ்தான், நிகரகுவா ஆகிய நாடுகளை நீக்கியுள்ளது இங்கிலாந்து அரசு. பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதை எதிர்த்துப் போரிடுவதில் பாகிஸ்தானின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் வரவேற்கப்படுவதாக நிதி நடவடிக்கைச் செயற்குழு கூறியுள்ளது.

பணமோசடி மீதான ஆசிய-பசிபிக் குழுவுடன் தொடர்ந்து பாகிஸ்தான் பணியாற்றும் என்று இங்கிலாந்து திறைசேரி வெளியிட்டுள்ள ஆலோசனை அறிவிப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அதிகாரப்பூர்வ இங்கிலாந்து அரசுச் சட்டத்தில், இந்த சட்டதிருத்தம் 'அதிக ஆபத்துள்ள மூன்றாம் நாடுகள்' பட்டியலில் இருந்து பாகிஸ்தானை நீக்குகிறது என்று வெளியாகியிருந்தது.

இதனை பாகிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி பிலாவல் சர்தாரி பூட்டோ தனது டுவிட்டரில் பகிர்ந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

# மருத்துவ உபகரணத் தயாரிப்பில் முதல் ஐந்து நாடுகளில் இந்தியா!



புதுடெல்லி, நவ.16

உலகளாவியரீதியில் மருத்துவஉபகரணங்களைத் தயாரிக்கும் முன்னணி நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில் நுட்பமையம் ஒன்றில்ஒருங்கிணைந்த உபகரணங்கள் கட்டடத் திறப்பு விழாவில் மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் ஜிதேந்திரா சிங் கலந்து கொண்டிருந்தார். கட்டடத் திறப்பு நிகழ்ச்சிக்கு பின்பு மாணவர்கள் மற்றும்

ஆசிரியர்கள் முன் உரையாற்றிய மந்திரி சிங், செயற்கை இதய வால்வு, ஆக்சிஜனேட்டர் உள்ளிட்ட சில தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்கள் அமெரிக்கா, ஜப்பான், பிரேசில் மற்றும் சீனா போன்ற நாடுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த 4 நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைந்து உள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்படும் இந்த உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியில் முதல் 5 நாடுகளில் இந்தியாவும் இடம் பிடித்துள்ளது. இவற்றின் விலையானது பிற 4 நாடுகளின் விற்பனை விலையில் மூன்றில் ஒரு பங்கு விலையிலேயே இங்கு இருக்கிறது. என கூறியுள்ளார்.

இதுதவிர, உலக தரத்திலான உள்நாட்டு உற்பத்தி உபகரணங்கள், வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களுடன் ஒப்பிடும்போது, மூன்றில் ஒரு பங்கு முதல் நான்கில் ஒரு பங்கு வரை குறைந்த விலையில் இந்தியா நோயாளிகளுக்கு கிடைக்கப் பெறும் என்றும் பிரதமர் மோடியின் ஆத்மநிர்பார் தொலைநோக்கு திட்டத்தின் கீழ், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ மேலாண்மையில் சுய சார்பை பிரதிபலிக்கும் வகையில் நாடு தற்போது உள்ளது என அவர் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 250 பெண்களைப் பார்ப்பதற்கு குவிந்த 14ஆயிரம் இளைஞர்கள்



மாண்டியா, நவ.16

கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டம் நாகமங்கலா தாலுகா ஆதிசுஞ்சனகிரி தொகுதியில் திருமண வரன் பார்க்கும் நிகழ்வு நடந்துள்ளது. இதில் 250 பெண்களை வரன் பார்க்க சுமார் 14 ஆயிரம் இளைஞர்கள் குவிந்து உள்ளமையுடன் இது அதிர்ச்சியூட்டும் விடயமாகவும் பார்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

'ஒக்கலிகா மணமக்கள் மாநாடு' என்ற பெயரில் கடந்த ஞாயிறு அன்று நடைபெற்ற இந்தத் திருமண வரன் நிகழ்ச்சியில் பங்குபெற சுமார் 14,000 இளைஞர்கள் பதிவு செய்து இருந்தனர். ஆனால் 250 பெண்கள் மாத்திரமே குறித்த நிகழ்வுக்காகப் பதிவு செய்துள்ளனர் என்ச்ஜ் கூறப்படுகின்றது.

இந்நிலையில், 13,750 இளைஞர்கள் மணப் பெண் கிடைக்காமல் இருந்துள்ளனர் என

தகவல் வெளியாகியுள்ளது. இப்படி 250 பெண்களை வரன் பார்க்க ஏராளமான இளைஞர்கள் அந்த பெண் பார்க்கும் மாநாட்டுக்கு வந்துள்ளமை தொடர்பாக புகைப்படம் இணையத்தில் வைரலான நிலையில் இளைஞர்களின் நிலையறிந்து பலரும் தங்கள் வருத்தத்தை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கு.

# கல்குவாரி சரிந்த விபத்தில் 12 தொழிலாளர்கள் மரணம்

மிசோரமில் நத்தியால் மாவட்டத்தில் மவ்தார் கிராமத்தில் இயங்குகின்ற தனியார் நிறுவனத்தின் கல்குவாரியில் பணியில் ஈடுபட்டு இருந்தபோது, திடீரென குவாரியில் கற்கள் அதிக அளவில் சரிந்து விழுந்துள்ளமையால் தொழிலில் ஈடபட்டிருந்த தொழிலாளர்கள் 12 உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் 12 தொழிலாளர்கள் சிக்கி கொண்ட நிலையில் இதுபற்றித் தகவல் அறிந்து எல்லை பாதுகாப்பு படையினர் உடனடியாக அந்த பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டமையுடன், தேசிய பேரிடர் மீட்பு படையினர் நேற்று காலை அந்த பகுதிக்கு சென்று மீட்பு பணியை தொடங்கினர்.

இரண்டு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய அந்த குழு விபத்தில் சிக்கி உயிரிழந்த 8 தொழிலாளர்களின் உடல்களை நேற்று மீட்டதுடன், மீதமுள்ள 4 தொழிலாளர்களை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து அவர்களை தேடும் பணி நடந்த நிலையில், மீட்பு பணியில் 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மேலும் மீதமுள்ள ஒருவரை காணவில்லை என்று கூறப்படுவதுடன் அவரை தேடும் பணி நீடிக்கித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.



# அந்தமான் விமான சேவை 18 ஆம் திகதி வரை ரத்து!

சென்னை, நவ.16

வங்காள விரிகுடா கடலில் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களை உள்ளடக்கிய யூனியன் பிரதேசமான அந்தமானுக்கு சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்ற நிலையில், சென்னை – அந்தமான் இடையே இயக்கப் பட்டு வரும் 14 விமானப் பயணங்கள் 18 ஆம் திகதி வரை ரத்து செய்யப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்ட்பிளேர் விமான நிலையத்தில் ஓடுபாதை பராமரிப்பு பணிகள் காரணமாக விமான சேவை 3 நாள்கள் நிறுத்தி வைக்கப்படுவதாக போர்ட் விமான நிலையத்தின்டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்ட் பிளேரில் உள்ள வீர சவார்க்கர் விமான நிலையத்தில் ஒரே ஒரு ஓடுபாதை மட்டுமே உள்ளது. இதனால், போர்ட் பிளேருக்கு வரும் அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. சிறந்த சுற்றுலாத்தளமாக விளங்கும் அந்தமானில் இருந்து கொல்கத்தா, விசாகப்பட்டினம், சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெங்களூர் தொழிநுட்ப மாநாட்டை ஆரம்பித்து வைத்தார் பிரதம் மோடி



பெங்களூர், நவ.16

மூன்று நாள்கள் நடைபெறவுள்ள பெங்களூர் தொழில்நுட்ப மாநாட்டை இன்றையதினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

அத்துடன், இந்த மாநாட்டில் 9 முக்கியமான ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன. இதில் இருபதுக்கும் மேற்பட்ட உற்பத்தி பொருள்கள் வெளியிடப்படுகின்ற நிலையில் இந்த மாநாட்டில் 575க்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த புத்தொழில் நிறுவனங்கள்(ஸ்டார்ட்அப்) கலந்து கொள்கின்றன. உலகம் முழுவதும் இருந்து பல்வேறு நாடுகளை சேர்ந்த 350 க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப நிபுணர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதுடன் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில் முதலீட்டாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் காணொலி வாயிலாக மாநாட்டை தொடங்கி வைத்த பிறகு பிரதமர் மோடி உரையாற்றுகையில் வறுமைக்கு எதிரான போரில் தொழில்நுட்பத்தை ஆயுதமாக இந்தியா பயன்படுத்துகிறது. முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கும் நாடாக இந்தியா அறியப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் இருந்து ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை இருமடங்கு ஆகியுள்ளது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# முன்மாதிரியான துறைமுகமாக ஒலுவிலை மாற்ற நடவடிக்கை

## கடற்றொழில் அமைச்சில் உயர்மட்டத்தில் ஆராய்வு



ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை கடற்றொழில் அமைச்சரின் ஒத்துழைப்புடன் முன்மாதிரியான துறைமுகமாக செயற்படுத்தும் ஆர்வத்துடன் பிரதேச கடற்றொழிலாளர்கள் இருக்கின்றனர் என ஒலுவில் பலநாள் படகு உரிமையாளர் சங்கத் தலைவர் நஸீர் தெரிவித்துள்ளார்.

மாளிகாவத்தை கடற்றொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற ஒலுவில் துறைமுகம் தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றி கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த ஒலுவில் பலநாள் படகுகள் சங்கத்தின் தலைவர் ஒலுவில் துறைமுகத்தின் வாயிலை தூர்வாரி துறைமுகத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பட்சத்தில் துறைமுகத்தை பராமரிப்பதற்கான செலவை ஈடுசெய்யும் வகையில் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

சுமார் 54 மில்லியன் யூரோக்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒலுவில் துறைமுகத்தை செயற்படுத்துவதன் ஊடாக பிரதேச கடற்றொழிலாளர்கள் பூரணமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அமைச்சுத் தெரிவித்தது.

இந்நிலையில் ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை வினைத்திறனுடன் செயற்படுத்தி அப் பிரதேச கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு நிலைபேறான கட்டமைப்பை உறுதிப்படுத்துகின்ற – சமகாலத்தில் துறைமுகத்தின் செயற்பாட்டினால் அயல் கிராமங்களுக்கு கடலரிப்பு போன்ற எந்தவித பாதிப்புக்களும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலான – பொறிமுறையை உருவாக்குவது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது.

மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகளை முகாமை செய்யும் பொறுப்பை பிரதேச கடற்றொழில் சங்கத்திடம் ஒப்படைப்பதற்கு ஆர்வம் செலுத்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார்.

இந்நிகழ்வின்போது தேவையான மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முடிவெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க மற்றும் மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் கடலோரப் பாதுகாப்பு திணைக்களம் கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் ஒலுவில் பிரதேச கடற்றொழிலாளர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது வைத்தியசாலையில் கண் வில்லை சத்திர சிகிச்சைகள்








(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தேசிய கண் வைத்தியசாலை மருத் குதுவ குழுவினால் ஒக்டோபர் 31 சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் கண் வில்லை (லென்ஸ்) வைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட 135 பேரில், 50 பேருக்கான இலவச லென்ஸ் வைக்கும் சத்திர சிகிச்சை காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் விரைவில் நடைபெறவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் இணைந்து பிராந்திய பணிப்பாளர் டொக்டர். ஐ.எல்.எம்.றிபாஸ் மேற்கொண்ட அயராத முயற்சியின் பலனாக பாப் பௌன்டேசன் அனுசரணையில் இச்சத்திர சிகிச்சைகள் நடைபெறவுள்ளன.

மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர். ஏ.எல்.எம்.அஜ்வத்தின் தலைமையில், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்ற சத்திர சிகிச்சை பயனாளிகளுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் நிகழ்வில் பிராந்திய பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், வைத்திய அதிகாரி சனுஸ் காரியப்பர், பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், தாதிய பரிபாலகர் பி.எம்.நஸ்றுதீன், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எம்.ஐ.எம்.சதாத் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இச்சத்திர சிகிச்சைக்குச் செல்வதற்கான இலவச போக்குவரத்து ஏற்பாடுகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்குப் பல்கலையின் வேந்தராக பாயிஸ் முஸ்தபா



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக பிரபல சட்ட மேதை ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா அவர்கள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்னர் தேசபந்து ஜெசிமா இஸ்மாயில் அவர்களும் பேராசிரியர் இஸ்ஹாக் அவர்களும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர்களாக இருந்திருக்கிறார்கள்.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக இவர் செயற்படும் விதத்தில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# கந்தளாயில் இளைஞர் ஷொட்கன்னுடன் கைது!

(எவ்.முபாரக்)

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மறைத்து வைத்திருந்த ஷொட்கன் துப்பாக்கியுடன் ஒருவரை நேற்றுத் தாம்கைது செய்துள்ளனர் என அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வான்எலப் பகுதியைச்சேர்ந்த இருபது வயது ஒருவரையே இவ்வாறு ஷொட்கன் துப்பாக்கியுடன் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் மிருகங்களை வேட்டையாடுவதற்கு இதைப்பயன்படுத்தி வந்தார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அக்போபுர குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதோடு கந்தளாய் நீதிவான் முன்னிலையில் அவரை ஆஜர்படுத்த உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# மே 9 ஆம் திகதி கோட்டாபயவை கொல்வதற்கு திட்டம் தீட்டப்பட்டது!



## என்கிறார் விமல் வீரவன்ஸ

கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக் காரர்கள் பிரவேசித்தபோது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொலைசெய்ய திட்டம் தீட்டப்பட்டதாக உத்தர லங்கா கூட்டமைப்பின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜுன் மாதம் 9 ஆம் திகதி நாட்டில் பல்வேறு இடங்களில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அத்தோடு, கோட்டை ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் பிரவேசித்து அவற்றை ஆக்கிரமித்திருந்தனர்.

இதன்போதே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவைக் கொல்லும் திட்டம் தீட்டப்பட்டதாக உத்தர லங்கா கூட்டமைப்பின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

# சஜித்துடன் இணையவில்லையாம் சுதர்ஷினி உள்ளிட்டோர் அறிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சுயேச்சை உறுப்பினரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுதர்னி பெர்னாண்டோபுள்ளே, தாம் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணையவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவில் இருந்து சுயேச்சையாக இருந்த 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்துகொண்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார்.

தான் மற்றும் அனுர பிரியதர்சன யாப்பா, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன, கலாநிதி சுதர்னி பெர்னாண்டோபுள்ளே, பியங்கர ஜயரத்ன மற்றும் ஜயரத்ன ஹேரத் ஆகியோர் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்துகொண்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, தாம் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணையவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம், தாம் வெளிநாட்டில் இருப்பதால் இது தொடர்பில் தனக்கு எந்த உண்மையும் தெரியாது என புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியங்கர ஜயரத்னவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தான் எந்த கூட்டணியிலும் சேரவில்லை என்றும் அவர் சமூக ஊடகங்கள் வாயிலாக கூறியுள்ளார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன மற்றும் ஜயரத்ன ஹேரத் ஆகியோரும் தாங்கள் ஐக்கியக் கூட்டணியில் இணையவில்லை என்றும் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



# மன்னார் மத்திய பஸ் நிலையத்தில் நீரிழிவு தின விசேட பரிசோதனை!

மன்னார் மத்திய பஸ் நிலையத்தில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை காலை நீரிழிவு உள்ளிட்ட தொற்றா நோய்களை கண்டறிவதற்கான பரிசோதனை இடம் பெற்றது.

மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்பு பிரிவினர் இணைந்து இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன் போது பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தமக்குத் தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதனின் பணிப்புரைக்கு அமைவாக வைத்தியர்கள் சுகாதார பிரிவினர் இணைந்து பரிசோதனைகள் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# பெரும்போகதிற்கு தேவையான யூரியா உரம் இன்று முதல் விநியோகிக்கப்படும்!

பெரும்போக நெற்செகையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரம் இன்று (புதன்கிழமை) முதல் விடுவிக்கப்படவுள்ளது. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலகங்கள் ஊடாக உரங்கள விநியோகிக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் நிதியுதவி மூலம் மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 22,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தின் மற்றுமொரு ஏற்றுமதி நேற்றுகொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இறக்குமதியை பார்வையிட்ட விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, போதியளவு யூரியா உரம் கையிருப்பு உள்ளதாகவும், அவற்றை முறையாக விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.




# காலநிலை மாற்ற மாநாடு பற்றிய விழிப்புணர்வூட்டும் செயல் அமர்வு!

COP27 - UN காலநிலை மாற்ற மாநாடு பற்றிய விழிப்புணர்வூட்டும் செயல் அமர்வு கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ணா வித்தியாசாலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிபர் கே.திலீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருத்தினராக, எதிர்காலத்தை நோக்கிய சுற்று சூழல் கழக செயலாளர் ம.சசிகரனும் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கருத்துரைகளை வழங்கினர்.

அதனை தொடர்ந்து மாணவர்கள் கால நிலை மாற்றத்துக்கு எதிரான விழிப்புணர்வு வாச

கங்களை காட்சிப்படுத்தி, கால நிலை மாற்றத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

# கோண்டாவிலில் வீடுடைத்து திருட்டு குற்றத்தில் வவுனியா வாசி கைது!

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் வீடொன்றை உடைத்து நகை, பணம் மற்றும் தொலைபேசியைத் திருடிய குற்றச்சாட்டில் நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றைக் கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி உடைத்து உட்புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த நகைகள் மற்றும் பணம் உள்ளிட்டவற்றை திருடிச் சென்று இருந்தனர்.

அது தொடர்பில் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின்பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உரும்பிராய் பகுதியில் நடமாடுகிறார் எனக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அந்த நபரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மேற்படி நபர் வவுனியாவை சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளதாகவும் , அவரிடம் இருந்து இரண்டரை பவுண் தங்க சங்கிலி, 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒரு லட்ச ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இனப்பிரச்சினைக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு கூறும் பட்சத்தில், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த ஜனாதிபதியுடனான பேச்சில் கலந்துகொள்வது குறித்து பரிசீலனை செய்வோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடுமையாகச் சாடினார்.

நாட்டில் ஒற்றையாட்சி முறையை கைவிட்டு, சமஷ்டியை ஏற்படுத்துவதற்குரிய உத்தரவாதத்தைப் பெறாமல், எமக் குரிய பேரம் பேசும் சந்தர்ப்பத்தை இல்லாமல் ஆக்காதீர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் கடுமையாகச் சாடிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஒரே நிகழ்ச்சி நிரலில் பயணிகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டுவதற்காக வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளை ஒரே மேசையில் அமர்ந்து, பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபட வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன் கிழமையன்று நாடாளுன்றில் வைத்து அழைப்பொன்றை விடுத்திருந்தார்.

ஐ.தே.க. சார்பில் தேசியப் பட்டியல் ஊடாகக் கிடைத்த ஒரேயொரு ஆசனத்தைப் பெற்று நாடாளுமன்றம் வந்திருந்தபோது, இலங்கையில் சமஷ்டி யாட்சியை ஏற்படுத்துவது நடைமுறைக்குச் சாத்திமில்லை என அப்போது ரணில் விக்கிரமசிங்க என்னிடம் தெரிவித்திருந்தார்.

நாட்டில்ஏற்பட்டிருக்கும்பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, சர்வதேசத்திடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்குகின்றது.

கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்துவதற்காக, நல்லாட்சி அரசிடம் பேரம் பேசக்கூடிய மக்கள் ஆணையை எமக்கு பெற்றுத் தாருங்கள் என வடக்கு, கிழக்குதமிழ்மக்களிடம்கேட்டுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்த ஆணைக்கு மாறாக ஒற்றையாட்சிக்கு இணங்கிருந்தனர்.

அன்று இறுதிச் சந்தர்ப்பமொன்றை வழங்குமாறு வடக்கு, கிழக்கு மக்களிடம் வாக்குகளைக் கேட்டுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், எந்தவித பேரமும் பேசாமல் ஜனாதிபதியுடன் பேச்சில் கலந்துகொள்ளவுள்ளமை அன்று போலவே இன்றும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற செயலாகும்.

கடந்த வருடம் நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, சர்வதேசத்திடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவ்வாறான நிகழ்ச்சி நிரல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே, இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறி, வடக்கு, கிழக்குதமிழ்த்தரப்பினரை அழைத்து அவர்களுடன் பேச்சில் கலந்துகொண்டு, நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூற முற்படுகின்றமை சர்வதேசத்தை ஏமாற்றுகின்ற ஒரு செயலாகவே நாம் பார்க்கின்றோம். இலங்கைத் தீவில் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய இன நல்லிணக்கத்துக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கப்படுவதற்கு சமஷ்டியே ஒரே வழியாகும்

ஒற்றையாட்சி முறையை இல்லாதொழித்து சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்தத் தயார் என்பதை தமிழ், சிங்கள மக்கள் அனைவரிடமும் பகிரங்கமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூற வேண்டும்.

அவ்வாறு கூறும் பட்சத்தில், இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சில் கலந்துகொள்வது குறித்து பரிசீலனை செய்வோம் – என்றார்.

# வர்த்தக நடவடிக்கைகள் 3 மாதத்தில் அதிகரிக்கும்!

## மத்திய வங்கி

நாட்டின் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக வர்த்தக நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகள் மேலும் அதிகரித்துள்ளன என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலம் மற்றும் பொருளாதார நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் விரிவாக்கம் காரணமாக அடுத்த மூன்று மாதங்களில் வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இருப்பினும், விநியோகத் தடைகள், அதிக நேரடி மற்றும் மறைமுக வரிகள், மூலதனச் செலவு மற்றும் உள்ளீட்டு விலைகள் ஆகியவை வணிகச் செயற்பாடுகளுக்குத் தீங்கு விளைவிப்பனவாக அமைந்துள்ளன என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், உற்பத்தி மற்றும் சேவைகள் ஆகிய இரண்டு நடவடிக்கைகளுக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு ஒக்ரோபர் மாதத்தில் குறைந்துள்ளது என்றும் இலங்கை மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2022 இல் வெளியிடப்பெற்றது.